# சூரிய உதயம், அஸ்தமனம் கண்டு உத்வேகம் பெறலாம்!

**சம்ஸ்கிருத செல்வம் -- அத்தியாயம் 24**

இந்திய இலக்கியங்களில் உள்ள காவியங்களில் சூரியோதயமும் சூரியாஸ்தமனமும் கண்டிப்பாக இடம் பெறும். கவிஞன் தன் மனோபாவத்திற்கு ஏற்றபடியும் காவியத்தின் இடத்திற்குத் தக்கபடியும் அவற்றை வர்ணிப்பான். பாஞ்சாலி சபதத்தில் மஹாகவி பாரதியார் எழுதியுள்ள சூரியோதய வர்ணனையை அனைவரும் படிக்க வேண்டும்.

கவிஞர் ஒருவரால் சூரியோதயம் மற்றும் அஸ்தமனம் எப்படி கையாளப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.



உதயே சவிதா ரக்த: ரக்த: சாஸ்தமனே ததா ।
சம்பத்தௌ ச விபத்தௌ ச மஹதாம் ஏகரூபதா ॥

இதன் பொருள்: சூரியன் உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் பிரகாசமாக விளங்குகிறான். அதே போலவே உண்மையிலேயே பெரியோராக விளங்குபவர்கள் சம்பத் இருக்கும் போதும் விபத்து வரும் காலங்களிலும் நிலையான உற்சாகத்துடன் ஒரே மாதிரியாக இருப்பார்கள்.

இங்கே ‘சம்பத்’ என்பதை செல்வம் கொண்டு உயர் நிலையில் இருக்கும் காலத்தில் என்றும் ‘விபத்து’ என்பதை செல்வமில்லாமல் தாழ்ந்திருக்கும் காலங்களிலும் என்று கொள்ள வேண்டும். சூரியனைப் பார்த்து உத்வேகம் பெறுவது போல உயர்ந்தோரைப் பார்த்து உத்வேகம் பெற்று நிலையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

உயர்ந்தோரைப் பற்றிய இன்னும் ஒரு கவிதை!

**மாலதி குஸுமஸ்யேவ த்வே வ்ருத்தி ஸ்தோ மனஸ்வின: ।**
**மூர்த்னி வா சர்வலோகஸ்ய ஷீர்யதே வன் ஏவ வா ॥**

மாலதி மலரானது ஒன்று தெய்வங்களின் தலையில் காணப்பட வேண்டும் அல்லது வனங்களில் (யாருடைய காலடியிலும் நசுங்காதபடி) உதிர்ந்து கிடக்க வேண்டும். அதே போல பிறப்பிலேயே தலைவர்களாக சுய மன உறுதியுடன் உள்ளவர்கள் இரண்டே இரண்டு விதமான இயல்பை அல்லது விதியைக் கொண்டவர்களாக உள்ளனர். ஒன்று அவர்கள் (தங்களின் வழிகள் மூலமாக) உச்சிக்குச் செல்வர் அல்லது அனைத்தையும் துறந்து வனங்களில் வசிப்பர்.

சத்புருஷர்களின் இலக்கணத்தைக் கூறும் இன்னும் ஒரு கவிதை:

**சாயாமன்யஸ்ய குர்வந்தி ஸ்வயம் திஷ்டந்தி சாதபே ।**
**பலதான்யபி பரார்த்தாய வ்ருக்ஷா: சத்புருஷா இவ ॥**

மரங்கள் சூரியனுடைய வெப்பத்தைத் தாங்கியவாறே நின்று கொண்டு மற்றவர்களுக்குத் தன் நிழலை அளித்துத் தங்க இடம் கொடுக்கின்றன. மற்றவர்களின் உபயோகத்திற்காக பழங்களையும் அவை சுமக்கின்றன.

இந்த வகையில் அவை நல்ல சத்புருஷர்களை ஒத்திருக்கின்றன. (அதாவது சத்புருஷர்கள் மனித குலத்தில் மற்றவர்களின் நலனுக்காகவே வாழ்ந்து தாம் போகங்களுக்காக வாழ முற்படுவதில்லை)

வலிமை வாய்ந்த சொற்களால் அருமையான கருத்துக்களைத் தெரிவித்து கவிதைகள் எப்படி அழகுற மிளிர்கின்றன என்பதைப் பல முறை படித்துப் பார்த்து உத்வேகம் பெற வேண்டும்.

Contact swami_48@yahoo.com

^^^^^^^^^